# எதிர்காலம்

இதழ் 2 | பெப்ரவரி | 1998


# 7,00,000 தமிழ் மக்கள் இடம்பெயர்வு

## நாளாந்தம் 1500 நோயாளிகளுக்கு ஒரு வைத்தியர்

"வன்னிபெரு நிலப் பரப்பில் நிலவும் மருத்துவ அவலங்கள் எங்களை ஆழமாகப் பாதிக்கின்றது. இவ் அவலங்களை உடனடியாக நிறுத்துமாறு நாம் அவசரமாகக் கோரும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம்" என கிறிஸ்டியன் எய்ட் எனும் சர்வதேச உதவி நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிரிவின் தலைவர் திரு. ஜக் ஆர்தி கோரியுள்ளார்.

*7,00,000 இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளுக்கான சர்வதேச உதவி நிறுவனங்களின் நிலையம் அரசினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சின்னாபின்னப்பட்டுத்தப் பட்ட இம் மக்களின் உண்மை நிலவரம் பூரணமாக வெளியே வரவில்லை என தன் அவசர அறிவிப்பில் தமிழ் மக்களின் நிலைபற்றி கூறியுள்ளது 'கிறிஸ்டியன் எய்ட்'.*

*மலேரியா, தைபோயிட் மற்றும் பல்வேறு சத்துணவு இன்மையால் ஏற்படும் நோய்கள் வன்னிபெரு நிலப்பரப் பில் வெகுவேகமாகப் பரவி வருவதை சுட்டிக்காட்டியுள்ள 'கிறிஸ்டியன் எய்ட்' தினசரி 1500 நோயாளிகளுக்கு ஒரு வைத்தியர் பார்வையிடவேண்டிய அவல சூழ்நிலை உள்ள தாகக் குறிப்பிட்டுள்ளது.*

## விட்டமின் குறைபாட்டால் பார்வை குறையும் தமிழ் சிறார்கள்

### – 'கிறிஸ்டியன் எய்ட்' அபாய அறிவிப்பு

*சிறீலங்காவின் மருத்துவத் தடை காரணமாக அத்தியாவ சிய மருந்துப் பொருட்கள் தமிழ்மக்களுக்கு நிராகரிக்கப் படுவதாலும் கர்ப்பிணித் தாய் மார் கருப்பை நோய்களாலும் இரத்தசோகையினாலும் பாதிக்கப்படுவதாக 'கிறிஸ்டியன் எய்ட்' சுட்டிக்காட்டியுள் ளது. மாலைக்கண் நோய் எனப்படும் கண்பார்வை மங்கும் நோய்களுக்கான அறிகுறி விட்டமின் 'ஏ' பற்றாக்குறையால் ஏற்பட்டு வருகிறது என எச்சரிக்கப்பட்டுள்ளது.*

**ஆசிரியர் கருத்து**

## சத்துணவுக்கான வேண்டுதல்

சத்துணவின்மையும் மருத்துவத் தடையும் இன்று இடம் பெயர்ந்து வாழும் எம் மக்களின் முன் எழுந்துள்ள பூதாகர மான பிரச்சனையாகும். சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான பொருளாதாரத் தடையும் அதன் மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளும் மக்களின் நாளாந்த வாழ்வை சீர் குலைத்து இன்று பட்டினிச்சாவையும் மருத்துவ அவலங்க ளையும் எம் மக்களின் வீதிகளுக்கும் முற்றங்களுக்கும் அழைத்து வந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவ்விரு பிரச்சனைகளை யும் பல்வேறு சுமைகள் மத்தியில் கடந்த சில வருடங்களாக கையாண்டு வருகின்றது. எமது சத்துணவுக் கூடங்களும் மருத்துவ உதவி நிலையங்களும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இடம்பெயர்ந்த மக்களுக்காக செயற்பட்டு வருகின்றன. ஆயினும், இன்றைய தேவைகள் எமது இயலுமையையும் தாண்டிச் செல்கையில் உங்கள் கரங்களே அந்த உறவுகளை சத்துணவூட்டி நோய் நொடி களிலிருந்து காப்பாற்ற முடியும்.

**உத்தியோகபூர்வ மதிப்பீடு**

## வன்னிக்குத் தேவைப்படும் மருத்துவ நிலையங்கள்

| | |
|---|---|
| 4 அடிப்படை வைத்தியசாலை | – 1 இலட்சம் மக்களுக்கு ஒன்று |
| மாவட்ட வைத்தியசாலைகள் | – 50,000 மக்களுக்கு ஒன்று |
| சிறிய வைத்தியசாலை / மகப்பேறு நிலையம் | – 20,000 மக்களுக்கு ஒன்று |
| மருத்துவத் தாதிகள் | – 2,500 மக்களுக்கு ஒருவர் |
| மருத்துவக் கண்காணிப்பாளர் | – 8,000 மக்களுக்கு ஒருவர் |

**தற்போதைய நிலவரம்**

**முல்லைத்தீவு மாவட்டம்:** மொத்த சனத்தொகை 233,000

| வைத்தியசாலை | தினசரி நோயாளிகளின் | அதிகாரிகள் |
|---|---|---|
| மல்லாவி | 1000 – 1200 | 1 வைத்தியர்<br>2 RMP |
| புதுக்குடியிருப்பு | 1200 | 3 RMP |
| முத்தையன்கட்டு | 500 | 1 RMP |
| நட்டாங்கண்டல் | 500 | 1 RMP |
| முள்ளியவளை | 400 – 500 | 1 RMP |

(RMP : பதவி பெற்ற உதவி மருத்துவர்கள்)

**மல்லாவி வைத்தியசாலை - ஜனவரி 1998**

*மொத்த நோயாளிகள்: 22,804*
*மலேரியாவால் பாதிக்கப்பட்டோர்: 9,064 (10 பேர் மரணம்)*
*மரணமடைந்த குழந்தைகள் 12*

**துயரங்களைப் பகிர்வோம் நம்பிக்கையை பாதுகாப்போம்**

## நுண்கருத்து திட்டங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும்

யூ.என்.எச்.சீ.ஆர். /கெயர் நுண்கருத்துத் திட்டத்தின் மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வன்னிப் பெரு நிலப்பரப்பின் பல பிரதேசங்களிலும் பல்வேறுபட்ட திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

01. பூநகரிப் பிரதேசச் செயலர் பிரிவில் அமைந்துள்ள நாச்சிக்குடா, குமுழமுனை, கிராஞ்சி ஆகிய இடங்களில் தும்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேலையற்றிருந்த பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

02. பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முழங்காவில் பகுதியிலும்; கண்டாவளைப் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள புளியம்பொக்கணைப் பகுதியிலும் தொழில்சார் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு படித்து வேலையற்றிருக்கும் இளைய சமுதாயத்திற்கு தட்டச்சு, ஈருருளி, நீரிறைக்கும் இயந்திரம் என்பன திருத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

03. கரைச்சி பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள பாரதிபுரம் வித்தியாலயத்திற்கு பாடசாலைத் தளபாடம் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

04. கரைச்சிப் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள அக்கராயன் அண்ணாசிலையடி வீதி திருத்தம் செய்யப்படுகிறது.

05. பூநகரிப் பிரதேசச்செயலர் பிரிவிலுள்ள முட்கொம்பன் நல்லூர்வீதி திருத்தம் செய்யப்படுகிறது.

06. மன்னார் மாவட்டத்தில் 08 கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டும், 60 கிணறுகள் ஆழமாக்கல் வேலை நடைபெற்றும் வருகின்றன.

07. முல்லை மாவட்டத்தில் 03 புதிய கிணறுகள் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது.

08. முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசச் செயலர் பிரிவில் வள்ளிபுனம் மந்துவில் பகுதியிலும் கரைத்துறைப்பற்று புரதேசச் செயலர் பிரிவில் பொக்கணைப் பகுதியிலும் வீதி அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

09. வவுனியா மாவட்டத்தில் (60) பயனாளிகளுக்கான சிறுவியாபாரக் கடன் வழங்கல் நடைபெற்றுள்ளது.

## வலுவிழந்தோர் வாழ்வு நிலையம் திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டத்தில் வலுவிழந்தவர்கள் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் பகுதியில் வலுவிழந்தோர் வாழ்வு நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

வலுவிழந்தவர்களுக்கான தொழில் மனித வள மேம்பாட்டை எடுத்தல் பயிற்சி வழங்கல் என்ற அடிப்படையில் இந்நிலையமானது கிளிநொச்சி, முல்லைமாவட்ட, பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் மனவுள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கான செயற்திட்டத்தையும் இந்நிலையம் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கை மேற்கொண்டுள்ளது.

## "சிறுவர் பாதுகாப்பு நிலையம்" திறந்துவைப்பு

இன்றைய யுத்த சூழ்நிலையும் தொடரும் இராணுவ நடவடிக்கைகளும் தொடர்ச்சியான இடம்பெயர்வுகளும் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கமானது குறிப்பாக சிறுவர்களின் கல்வியிலும் வாழ்வு நிலையத்திலும் பெரும் பாதிப்பை உண்டுபண்ணியுள்ளது.

இப்பாதிப்பு பல சிறுவர்களை வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் பிச்சையெடுத்து வாழும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இவ்விடயத்தை கருத்திற் கொண்டு தமிழர் புனர்வாழ்வு கழகம் தனது துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டத்தின்கீழ் துயர் துடைப்புத் திட்டத்தில் இச்சிறுவர்களுக்கு வாழ்வளித்துப் பராமரிக்கும் "சிறுவர் பாதுகாப்பு நிலையம்" ஒன்றை கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதியில் ஆரம்பித்துவைத்துள்ளது.

இந் நிலையத்தில் 172 சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையத்தின் மூலம் இச்சிறார்களுக்கான தங்குமிட வசதி உணவு உடை போன்ற அடிப்படை வசதிகள் கல்வி வசதி தொழிற்பயிற்சி என்பன வழங்குவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் இவர்களுக்கான "வாழ்வுக்கைத்திறன் கல்வி நிலையம்" ஒன்றையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திறந்துவைத்துள்ளது.

## பல்துறை சுகாதாரச் சேவைப்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழக துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவிப் பகுதியில் சுகாதாரத் தொண்டர்களைப் பயிற்சியளிக்கும் 'பல்துறை சுகாதார சேவைப் பயிற்சி நிலையம்' கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் திரு. சிவகுரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்புவிழா நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் உட்பட சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் அரச சார்பற்ற அரசு நிறுவனப் பிரதிநிதிகள் எம்.எஸ்.எவ் ஒக்ஸ்பாம், போரூட் போன்ற சர்வதேச அரச சார்பற்ற பிரதிநிதிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அந்நிலையமானது சுகாதாரத் திணைக்களத்துடனும் பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வுக் கழகத்துடனும் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு திறப்புவிழா நிகழ்வில் நூலகம் ஒன்றும் பயிற்சி நிலையத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் இன்றுவரை 15ற்கு மேற்பட்ட சுகாதாரப் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பல சுகாதாரத் தொண்டர்கள் உருவாக்கப்பட்டு பயிற்சியும் இந்நிலையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

| மாவட்டம் | சுகாதாரத் தொண்டர் |
|---|---|
| கிளிநொச்சி | 105 |
| மன்னார் | 32 |
| முல்லைத்தீவு | 46 |
| வவுனியா | 60 |

## மாலதி அறிவாலயம் திறந்து வைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டத்தில் முல்லைமாவட்டம் தேராவில் பகுதியில் சமூகப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் மாலதி அறிவாலயம் என்ற அறிவை மேம்படுத்தும் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

## "இனிய வாழ்வு இல்லம்" திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டத்தின் கீழ்' விழிப்புலனற்று வலுவிழந்தவர்களுக்கான 'இனிய வாழ்வு இல்லம்' என்ற நிறுவனக் கட்டமைப்பு முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் புதுக்குடியிருப்புப் பிரதேசச் செயலாளர் திரு. தயாநந்தா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இவ்வில்லத்தில் இன்றுவரை 12 சிறார்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு, இவர்களுக்கான தங்குமிடம், உணவு, உடை பராமரிப்பு, கல்வி வசதிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சமூகப் பொருளாதார வளர்ச்சி நிறுவனமூடாக அளிக்கப்பட்டு வருகிறது.

## 'ஜீவா அமிர்தம்' சத்துணவு உற்பத்தி ஆரம்பம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்தி சேவைத் திட்டத்தின் கீழ் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தினால் போசாக்காய்வு குழந்தைகளுக்கும், கர்ப்பவதி, பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படக்கூடிய 'ஜீவ அமிர்தம்' என்ற சத்துணவு தயாரிக்கப்படும் உற்பத்தி நிலையம் கிளிநொச்சி மாவட்டம் புளியம்பொக்கணைப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது போன்ற 'ஜீவசுரபி', 'ஜீவ ஊட்டம்' என்ற இரு சத்துணவு தயாரிக்கும் நிலையங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பங்காளி நிறுவனங்களூடாக ஏற்கனவே நடைமுறைப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பழமரச் செய்கைத் திட்டமும் கண்காட்சியும்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சோவைத்திட்டத்தின் கீழ் முல்லை மாவட்டம் மாமூலைப் பகுதியில் பழமரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் திறந்துவைக்கப்பட்டு இவ்விடயம் சார்ந்த கண்காட்சியும் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில், இக்கன்றுகளை உற்பத்தி செய்யும் பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்டு பயிற்சிபெற்ற பயிற்சியாளருக்கான சான்றிதழ்கள் வழங்கி பயிற்சி ஆசிரியர் கௌரவிப்பினையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டது. மேலும் பயனாளிகளுக்கு பழமரச்செய்கை சம்பந்தமான புதிய பயிற்சிகளையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் முல்லைமாவட்ட விவசாயப் பணிப்பாளர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## "வயோதிபர் பராமரிப்பு இல்லம்" திறந்துவைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழக துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சோவைத்திட்டத்தில் யோகர்சுவாமிகள் திருவடி நிலையத்துடன் இணைந்து "முதியோர் பராமரிப்பு நிலையம்" கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் பகுதியில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. இராசநாயகம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இவ்வில்லத்தில் இன்றுவரை 42 வயோதிபர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கான தங்குமிடம் உணவு, அடிப்படை வசதிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

திறப்புவிழா நிகழ்வில் ஒக்ஸ்பாம், போரூட் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பெருந்தொகையான அரச அரசசார்பற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

★ தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு, போசாக்கு நிலையத்தில் போசாக்கு குறைந்த பிள்ளைகளை பராமரித்தல், முன்பள்ளி உதவிக் கொடுப்பனவு, மீள வேய்தல் ஆகியன உட்பட 16 திட்டங்களுக்கு 1997ம் ஆண்டு கார்த்திகை மாதம் வரை 12 இலட்சம் ரூபாவை முல்லை வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

## பொருட்கள் தட்டுப்பாடு நிதி நெருக்கடி

### – கிளிநொச்சி மாவட்டத்தின் ஒன்றியம் மகஜர் –

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒன்றியம் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் அதனூடான மக்களின் பாதிப்புக்களையும் குறிப்பிட்டு அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் பொது மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் இடம்பெயர்ந்த மக்களின் துயர் துடைப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய உலர் உணவு விநியோகத்தினால் ஏற்பட்ட செலவினம் இதுவரை ஈடுசெய்யப்படாமை பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு போக்குவரத்து வசதியின்மை உட்பட பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இம்மகஜரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் முற்றுமுழுதாக வழங்கப்படவேண்டும்; வறுமை நிவாரணம் வழங்கப்படுவதோடு மாவட்டதிற்குத் தேவையான உணவுப் பொருட்கள் மண்ணெண்ணை, பிள்ளைகளின் பால்மா வகைகள், வீட்டுப் பாவனைக்கான பொருட்கள் மாதாந்தம் வருவதை உறுதிசெய்வதோடு மருந்துத்தடை நீக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

## தமிழ் விவசாயிகளின் வயல்கள் அபகரிப்பு

அம்பாறை மாவட்ட கல்முனை நகர அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் கல்முனை நகரை அண்டிய தமிழ் விவசாயிகளுக்குச் சொந்தமான வயல்களை சுவீகரிப்பதற்கு சூழ்ச்சித் திட்டங்கள் சிறீலங்கா அரசினால் தீட்டப்பட்டுள்ளன.

# அரை மில்லியன் மக்கள் வாடுகின்றனர்

## – உதவி வழங்கும் நிறுவனங்கள்

*(தமிழ்நெற் – 26 பெப். 1998)*

★ வன்னி பிராந்தியத்தில் சுமார் 500000 மக்கள் போஷாக் கின்மையால் வாடுவதாக அப்பகுதியில் செயற்படும் சர்வதேச நிவாரண உதவி வழங்கும் நிறுவனங்கள் அறி வித்துள்ளன. இச்சூழ்நிலை எத்தியோப்பியா போன்று மிகக் கடுமையான அளவை அடையாவிட்டாலும் குறிப்பிடும்படி கடுமையான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

★ கடந்த 24.02.98 அன்று 11 வயதான கண்ணதாசன் ஷாந்தி, 15 வயதான ஈசன் ராமா ஆகியோர் மலேரியா நோயினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் மரண மடைந்துள்ளனர்.

★ அக்கராயன்குளம் பகுதியில் ஏராளமான பொதுமக்கள் இரத்தச்சோகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஆயினும், அங்கு நிலவும் கடும் மருத்துவப் பற்றாக் குறையினால் இந்நோயாளிகளைக் குணப்படுத்த முடிய வில்லை என அச் சர்வதேச நிவாரண உதவிவழங்கும் நிறுவனங்கள் கூறுகின்றன.



**அன்புள்ள புலம்பெயர்ந்த தமிழீழ மக்களே!**

இத் தாயின் அவலத்தையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கும் கவிதை வரிகளை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.
அனுப்பவேண்டிய முகவரி:
26 Rue du Département, 75018 Paris, France.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - லண்டன்

## லண்டன் மரதன்

எதிர்வரும் மார்ச் 15–ல் 'ஹேஸ்ரிங்ஸ்'ல் நடக்கவிருக்கும் 13 மைல்களைக் கொண்ட 'அரை மரதன்' ஓட்டப் போட்டியிலும், அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 26ம் திகதி 'லண்டன் மரதன்'–லுமாக 35 தமிழர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் பங்குகொள்கிறார்கள்.

கடந்த ஆண்டு முதல் தடவையாக 10 தமிழர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் பங்கு கொண்டு 6820 பவுண்டுகள் சேகரித்து, தாய் மண்ணில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேலைத்திட்டங்களில் ஒன்றான தமிழீழப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்து, கல்வி வசதி இழந்து இருக்கும் சிறுவர்களின் ஆரம்பப் பாடசாலைத் திட்டத்திற்கு அனுப்பப்பட்டு வன்னி, முல்லைத்தீவு, வாகரைப் பகுதிக ளில் செயல் வடிவம் பெற்றுச் செயற்படுவது குறிப்பிடத் தக்கது.

இம்முறை நடைபெற இருக்கும் 'லண்டன் மரதன்' போட்டியில் பங்குகொள்ளும் தமிழ் ஓட்டப்போட்டி வீரர்களால் சேகரிக்கப்படும் நிதி, போர்ச்சூழலில் தமது உடல், அங்கங்களை இழந்து அல்லல்படும் சிறுவர்கள், முதியோர்களுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்படும் திட்டங்களுக்கு அனுப்பப்படும்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**

**அனைத்துலக இணைப்பகம்**
P.O. Box 4254, Knox city,
VIC - 3152, Australia.

★

**'எதிர்காலம்'**
தொடர்புகட்கு:
26 Rue du Département,
75018 Paris, France.
Tel / Fax - 01 40 38 30 74

## தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகள்

E. Anantharajah
Hompech str. 16
41189 Monchengladbach,
Germany.

★

861, Brodview Ave
Toronto - Ontario,
M4K 2PQ, Canada.
Tel - 416 / 466 - 9624
Fax - 416 / 406 - 4755

★

G. Ananthan
Brorsons VJE-51, 2-TV
7400 Herning, Denmark.
Tel - 97 - 21 46 88
Fax - 97 - 21 76 49

★

79, Hoe Street, Walthamstow,
London E17 4SA, U.K.
Tel- 0181-520 5876
Fax- 0171-403 16 53

★

Suite 1L
170 - 10 Ceder croft road
Jamaica
New York - 11432,
U.S.A.

★

Wilson Kirubarajah,
Nordkapsgartan - 7-3tr
16436 Kista,
Sweden.
Tel- 08-750 84 25

★

K. Chinnaththurai,
Schiermonnikoog Str. 44,
1822 NB
Alkmaar, Netherland.

★

Tal Str. 15,
6020 Emmenbrucke,
Switzerland.
Tel / Fax - 041 260 83 98

★

P.O. Box 4277
Sofienberg
0506 Oslo, Norway.
Tel / Fax - 22-717537

★

Via Danthi
218/A
90141 Palermo,
Italy.